துபாய்

# ஹமாஸ் தலைவர் கொலையில் 26 சந்தேக நபர்கள்

## மொசாட் தலைவரைக் கைது செய்ய கோரிக்கை

பலஸ்தீன ஹமாஸ் இயக்க தலைவர்களில் ஒருவரான மஹமூத் அல் மபூவாவைக் கொலை செய்தது இஸ்ரேலின் மொசாட் உளவு அமைப்பினர்தான் என்பது நிரூபணமானால் மொசாட்டின் தலைவர் மெயர் டேகனைக் கைது செய்ய இன்டர்போல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஐக்கிய அரபுக் குடியரசு நாடுகளில் ஒன்றான துபாய் நாட்டின் காவல்துறையின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



கடந்த ஜனவரி 20ம் திகதி துபாய்க்கு சென்றிருந்த ஹமாஸ் இயக்கத் தலைவர் மபூவா அவரது விடுதி அறையில் கொல்லப்பட்டார். ஹமாஸ் இயக்கத்தின் இராணுவப் பிரிவை உருவாக்கியவர்களில் ஒருவரான இவர், ஆயுதங்கள் வாங்குவது தொடர்பான பேச்சுகளில் கலந்து கொள்வதற்காகவே அங்கு சென்றிருந்தாக கூறப்படுகின்றது. இவரை எந்தவித ஆயுதமும் இல்லாமல், மின்சாரம் பாய்ச்சி மூச்சுத் திணறடித்துக் கொன்றிருந்தனர். இந்தக் கொலையில் மொசாட்டுக்குத் தொடர்பு இருப்பதாக சந்தேகம் எழுந்துள்ளது.

இந்தக் கொலை தொடர்பாக மேற்கு நாடுகளின் கடவுச்சீட்டுக்களைக் கொண்டிருந்த 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 26 பேர் இந்தக் கொலைச் சதியில் இடம் பெற்றிருந்ததாக துபாய் காவல்துறை தெரிவித்துள்ளது. இவர்கள் ஐரோப்பா மற்றும் பல நாடுகளின் சிறப்பு கடவுச்சீட்டுக்களை (diplomatic passports) மோசடியாக பயன்படுத்தி துபாய்க்கு வந்துள்ளனர். சந்தேகப்படும் 26 பேரில் 6 பேர் பிரித்தானியா, மூவர் பிரான்ஸ், மூவர் அயர்லாந்து, மூவர் அவுஸ்திரேலியா, ஒருவர் ஜேர்மனி மற்றும் கொங்கொங் கடவுச் சீட்டுக்களைப் பயன்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இந்தப் 26 பேரில் 5 பேர் பெண்கள். இவர்களை இஸ்ரேலிய புலனாய்வுத்துறையே இயக்கியுள்ளது எனவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மபூவா கொலை வழக்கில் மொசாட்டுக்குத் தொடர்பு இருந்தால், மொசாட் தலைவருக்கு எதிராக இன்டர்போல் சிகப்பு எச்சரிக்கை பிறப்பிக்க வேண்டும். அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என துபாய் காவல் துறை தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் டாஹ் கல்பான் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், மபூவா கொலையில் மொசாட்டுக்குத் தொடர்பு இருப்பது உறுதியானால், மெயர் டேகனுக்கு எதிராக இன்டர்போல் சிகப்பு எச்சரிக்கை பிறப்பிக்க வேண்டும். அவரைக் கைது செய்து துபாயிடம் ஒப்படைக்க வேண்டும். இந்தக் கொலையில் இஸ்ரேலுக்குத் தொடர்பு இருப்பதாக 99 சதவீதம் நான் நம்புகிறேன். மொசாட் இந்த குற்றத்தின் பின்னணியில் இருந்தால் நிச்சயம் அது தண்டிக்கப்பட வேண்டும். அதன் தலைவர் கொலையாளியாக கருதப்பட வேண்டும் என்றார்.

படுகொலையில் தொடர்புடையதாக கருதப்படும் இஸ்ரேலியர்களின் நிழற் படங்ளையும் துபாய் வெளியிட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இவர்களைக் கைது செய்ய சிகப்பு எச்சரிக்கை உத்தரவை இன்டர்போல் பிறப்பித்துள்ளது.

ஆனால் இந்த கூற்றுகளையெல்லாம் இஸ்ரேல் நிராகரித்துள்ளது. சம்பந்தமே இல்லாத நபர்களுக்கு சிகப்பு எச்சரிக்கை பிறப்பித்துள்ளது என இஸ்ரேல் கூறியுள்ளது. இது கேலிக்கூத்தாக உள்ளது. மேலும், துபாய் காவல்துறைத் தலைவர் மொசாட் குறித்து கூறியுள்ள குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரமே இல்லை. அடிப்படையற்ற புகார்கள் இவை என்று இஸ்ரேல் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில், மபூவா முதலில் எந்தச் சூழ் நிலையில் இறந்தார் என்பதையே துபாய் காவல்துறை விளக்கவில்லை. வெறும் கண்காணிப்பு காமராவில் பதிவான சில வீடியோ படங்களை மட்டுமே அது காட்டி வருகிறது. அதில் சிலர் பேசிக் கொண்டிருக்கின்றனர், சிலர் நடந்து கொண்டுள்ளனர். இதை ஆதாரமாக கருத முடியாது என்றார். இதற்கிடையே கடவுச்சீட்டில் மோசடி செய்தது தொடர்பாக பிரித்தானியாவிற்கும், இஸ்ரேலுக்கும் இடையே உரசல்கள் தொடங்கியுள்ளன.

மேலும் இவர்களுக்கான விமானப் பயணச்சீட்டு வாங்குவதற்கு அமெரிக்க வங்கி அட்டைகள் பயன்படுத்தப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. அதுகுறித்தும் துபாய் காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை, இந்தப் படுகொலையை பல்வேறு நாடுகளும் கண்டித்துள்ளனர். பிரான்ஸ் அதிபர் நிக்கொலா சார்க்கோசி இந்தப் படுகொலையை கண்டித்துள்ளார். ஐரோப்பிய நாடாளுமன்ற பிரமுகர்களும் இதனைக் கண்டித்துள்ளனர்.

ஜேர்மனி

# 4 ஆயிரம் விமானிகள் வேலை நிறுத்தம்




ஜேர்மனியில் ஏயார் லைன் லுப்தான்சா விமான நிறுவனம் பிரசித்தி பெற்றது. இதில் சுமார் 4 ஆயிரம் விமானிகள் பணிபுரிகின்றனர். இவர்கள் தங்களுக்குப் பணிப் பாதுகாப்பு வழங்கக் கோரி 4 நாட்கள் வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தியுள்ளனர். இந்த வேலை நிறுத்தம் கடந்த 21ம் திகதி தொடங்கி 24ம் திகதி வரை நடைபெற்றது. இதனால் 3 ஆயிரம் விமானங்களின் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. மேலும் பல விமானங்களின் போக்குவரத்துத் தாமதமாகவும் நடைபெற்றது. இந்த விமானத்தில் முற்பதிவு செய்தவர்களுக்கு வேறு விமானங்களின் பயணம் செய்ய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டன.

இந்தோனேசியா

# மண் சரிவில் சிக்கி 70 பேர் பலி தலைநகரை இடம் மாற்ற முடிவு

இந்தோனேசியாவில் மண் சரிவில் சிக்கி 70 பேர் வரை பலியாகியுள்ளனர். பாண்டுங் நகருக்கு அருகில் உள்ள கிராமமொன்றில் இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளது. கடுமையான மழையுடன்கூடிய காலநிலையினால் மீட்புப் பணிகளில் சிக்கல் நிலைமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மண் சரிவில் உயிரிழந்த 16 பேரின் சடலங்கள் இதுவரையில் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மண் சரிவினால் பாதிக்கப்பட்ட சுமார் 600 கிராம மக்கள் வேறு இடங்களில் தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாரியளவில் மண்சரிவு இடம்பெற்றுள்ளதாகவும் இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை உயிருடன் மீட்கக் கூடிய சாத்தியம் மிகவும் அரிதாகவே காணப்படுவதாகவும் மீட்புப் பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். 500க்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் மீட்புப் பணிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுஇவ்வாறிருக்க, இந்தோனேசிய தலைநகராக கடந்த




500 ஆண்டுகளாக ஜகார்தா இருந்து வருகிறது. இந்த நகரத்தின் ஆயுள்காலம் விரைவில் முடிய இருக்கிறது. இந்த நகரத்தின் மக்கள் தொகை ஒரு கோடியே 20 இலட்சமாகும். இதன் காரணமாக அந்த நகரில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. குப்பைகள் அளவுக்கு அதிகமாக பெருகி வருகிறது. ஆண்டு தோறும் இந்த நகரில் வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இதனால் பெரும் சொத்தழிவுகள் ஏற்படுகின்றன. அத்துடன், ஜகார்தாவை சுற்றி உள்ள கடலில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. 2025ம் ஆண்டு கடல் தண்ணீர் இந்த நகரில் உள்ள ஜனாதிபதி மாளிகைக்குள் புகுந்து விடும் என்று உலக வங்கி எச்சரித்து இருக்கிறது. இதனால் தலைநகரை வேறு இடத்துக்கு மாற்ற அதிபர் சுசிலோ பாம்பாங் யுதோயோனோ திட்டமிட்டுள்ளார். விரைவில் இதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மெக்சிக்கோ

# பொது மக்கள், காவல்துறையினர் உட்பட 13 பேர் சுட்டுக்கொலை

மெக்சிக்கோவில் துப்பாக்கிதாரிகள் கண் மூடித்தனமாக நடத்திய தாக்குதலில் 13 அப்பாவிப் பொது மக்கள் பரிதாபமாகக் கொல்லப்பட்டுள்ளனர். மெக்சிக்கோவின் தென் ஒக்ஸஷா மாநிலத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலைத் தடுக்க முயன்ற உள்நாட்டு காவல்துறை உத்தியோகத்தர்கள் ஐந்து பேரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். தாக்குதல் இடம்பெற்ற பிரதேசத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சம்பவம் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வாகனங்களில் பண்ணை ஒன்றுக்குள் சென்ற துப்பாக்கிதாரிகள் குறித்த பண்ணை உரிமையாளர் மற்றும் அவரது மூன்று புதல்வர்களையும் படுகொலை செய்துள்ளனர். பண்ணையில் கடமையாற்றிக் கொண்டிருந்த மேலும் நான்கு பேரும் இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர். காவல்துறையினருக்கும் பிரதேச மக்களுக்கும் இடையில் மூன்று தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற மோதலில் 19 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கடந்த இரண்டு ஆண்டுகளில் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடைய சம்பவங்களினால் சுமார் ஒன்றரை இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது இங்கு மிகவும் குறிப்பிடத்தக்கது.

யேமன்

# அமெரிக்கா மீது தாக்குதல்கள் நடத்தப்படும் – அல்– ஹைடா மிரட்டல்

அமெரிக்கா மீது மீண்டும் தாக்குதல் நடத்தப்படும் என்று யேமன் நாட்டு அல்-ஹைடா தலைவர் குவாசிம் அல் ரய்மி எச்சரித்துள்ளார். அரேபிய தீபகற்பத்தின் அல்-ஹைடா தளபதியாக இருக்கும் அவர், இது தொடர்பாக அல்-ஹைடா இணையதள பத்திரிகை ஒன்றில் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது, நீங்கள் எங்கள் நாடுகளில் நுழைந்து எங்கள் மீது தாக்குதல் நடத்தினீர்கள். நாங்களும் உங்கள் மண்ணில் உங்கள் மீது தாக்குதல் நடத்தபோகிறோம். காத்திருங்கள். எங்களை நீங்கள் தான் ஒருங்கிணைத்தீர்கள். உங்கள் முயற்சிகள் உங்களுக்கு எதிராக முடிந்துள்ளது. யேமன் நாட்டு இளைஞர்கள் பலரை தீவிரவாத இயக்கத்தில் தள்ளியது தான் உங்கள் முயற்சிக்கு கிடைத்த பலன் என்று அந்த அறிக்கையில் கூறி இருக்கிறார். அல் ரெய்மி யேமன் நாட்டில் சானா நகரில் உள்ள சிறையில் இருந்து 2006ம் ஆண்டு பிப்ரவரி மாதம் தப்பித்த 23 பேரில் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.